# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1795/51 - 2013 පෙබරවාරි මස 01 වැනි සිකුරාදා - 2013.02.01

*1795/51 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.- பீ. 11/80.*

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிரிசேன,
சுகாதார அமைச்சர்.

கொழும்பு,
2013, சனவரி 17.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் உணவு (சுவையூட்டும் பதார்த்தங்கள் மற்றும் சுவையை அதிகரிக்கும் பொருட்கள்) ஒழுங்குவிதிகள் 2013 என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2014 ஆம் ஆண்டு யூலை 1 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) ஆளெவரும், அத்தகைய சுவையூட்டும் பதார்த்தம் மற்றும் சுவையை அதிகரிக்கும் பொருள் மூல அல்லது உற்பத்தி நாட்டின் இயைபான அதிகாரியினால் உணவில் பயன்படுத்தப்படுவதற்குப் பாதுகாப்பாகவும் பொருத்தமாகவும் இருக்கின்றதென அத்தாட்சிப்படுத்தப்பட்டிருந்தாலன்றி உணவில் பயன்படுத்துவதற்காக ஏதேனும் சுவையூட்டும் பதார்த்தத்தை அல்லது சுவையை அதிகரிக்கும் பொருளை இறக்குமதி செய்தலோ, உற்பத்தி செய்தலோ, களஞ்சியப்படுத்துதலோ, ஏற்றிச் செல்லுதலோ, விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ, விநியோகித்தலோ, பயன்படுத்துதலோ அல்லது விளம்பரப்படுத்துதலோ ஆகாது.

(2) ஆளெவரும், அத்தகைய சுவையூட்டும் பதார்த்தம் அல்லது சுவையை அதிகரிக்கும் பொருள் இதற்கான 9 ஆம் ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க சுட்டுத்துண்டைக் கொண்டுள்ள கொள்கலன் ஒன்றில் விநியோகிக்கப்பட்டாலன்றி, (வேறு ஏதேனும் பதார்த்தத்துடன் கலக்கப்பட்ட ஏதேனும் அனுமதிக்கப்பட்ட சுவையூட்டும் பதார்த்தம் அல்லது சுவையை அதிகரிக்கும் பொருள் உள்ளடங்கலாக) ஏதேனும் அனுமதிக்கப்பட்ட சுவையூட்டும் பதார்த்தம் அல்லது சுவையை அதிகரிக்கும் பொருளை உணவு தயாரிப்பதற்கான ஆக்கக்கூறு ஒன்றாக இறக்குமதி செய்தலோ, உற்பத்தி செய்தலோ, களஞ்சியப்படுத்துதலோ, ஏற்றிச் செல்லுதலோ, விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ, விநியோகித்தலோ, பயன்படுத்துதலோ அல்லது விளம்பரப்படுத்துதலோ ஆகாது.

3. ஆளெவரும் ஏதேனும் உணவுப்பொருளில் அட்டவணை 1 இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சுவையூட்டும் பதார்த்தத்தைக் கொண்டுள்ள ஏதேனும் சுவையூட்டும் தயாரிப்பைப் பயன்படுத்துதல் ஆகாது.

4. ஆளெவரும் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கரைசல் ஒன்று தவிர்ந்த வேறு கரைசலில் அடங்கியுள்ள ஏதேனும் சுவையூட்டும் பதார்த்தத்தை இறக்குமதி செய்தலோ, உற்பத்தி செய்தலோ, களஞ்சியப்படுத்துதலோ, ஏற்றிச் செல்லுதலோ, விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ, விநியோகித்தலோ, பயன்படுத்துதலோ அல்லது விளம்பரப்படுத்துதலோ ஆகாது.

5. நீர் தவிர்ந்த அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட சுவையூட்டும் பதார்த்தங்களில் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட வேறு கரைசல்கள் பிரித்தானிய அல்லது ஐக்கிய அமெரிக்கா வாகடவியல் நியமங்களுடன் ஒத்திசைவானதாதல் வேண்டும்.

6. பின்வருவன உணவில் சுவையை அதிகரிக்கும் பொருட்களாகப் பயன்படுத்தப்படலாம் :-

(அ) மொனோ சோடியம் குளுட்டமேற்று - INS 621 ;

(ஆ) டைசோடியம் 5' - குவானிலேற்று - INS 627 ;

(இ) டைசோடியம் 5' - இனோசினேற்று - INS 631.

7. சுவையை அதிகரிக்கும் பொருட்கள் -

(i) சிறந்த உற்பத்தி பழக்க வழக்கங்களின் (GMP) நியமத்தின் அளவிற்கு அமைவாக இருக்கும் அளவிற்கும் மற்றும் சுட்டுத்துண்டானது பயன்படுத்தப்பட்ட குறிப்பிட்ட பதார்த்தம் அல்லது பதார்த்தங்கள் பற்றிய தெளிவான வெளிப்படுத்துகை ஒன்றைக் கொண்டுள்ளவிடத்தும், உணவிற்குச் சேர்க்கப்படலாம் ;

(ii) சிசுக்களுக்கும் மற்றும் மூன்று வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்குமான ஏதேனும் உணவிற்குச் சேர்க்கப் படுதலாகாது ; அத்துடன்

(iii) இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட உணவுகளில் பயன்படுத்தப்படுதலாகாது.

8. (1) சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றையோ அல்லது சுவையை அதிகரிக்கும் பொருள் ஒன்றையோ கொண்டுள்ள உணவுப் பொருளின் சுட்டுத்துண்டானது, அதன்பின்னர் திருத்தப்படக்கூடியவாறான அல்லது மாற்றீடு செய்யப்படக்கூடியவாறான, 2005 ஆம் ஆண்டு சனவரி 19 ஆந் திகதிய 1376/9 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடல் மற்றும் விளம்பரஞ் செய்தல்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) பின்வருவனவற்றைக் கொண்டுள்ள உணவுப் பொதிக்கு அச்சிப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட சுட்டுத்துண்டு:-

(அ) ஆக்கக்கூறு ஒன்றாக இயற்கை சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றைக் கொண்டிருக்குமிடத்து, "இயற்கையான (X) சுவை" என்னும் சொற்களை உள்ளடக்குதல் வேண்டும். இங்கு (X) ஆனது சுவையின் விவரணமாதல் வேண்டும். (உ+ம் இயற்கையான மாம்பழச் சுவை, இயற்கையான கோழிச் சுவை) ;

(ஆ) ஆக்கக்கூறு ஒன்றாக இயற்கையானதை ஒத்த சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றைக் கொண்டிருக்குமிடத்து, "இயற்கையானதை ஒத்த (X) சுவை" என்னும் சொற்களை உள்ளடக்குதல் வேண்டும். இங்கு (X) ஆனது சுவையின் விவரணமாதல் வேண்டும் ;

(இ) ஆக்கக்கூறு ஒன்றாக செயற்கைச் சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றைக் கொண்டிருக்குமிடத்து "செயற்கை (X) சுவை" என்னும் சொற்களை உள்ளடக்குதல் வேண்டும்.இங்கு (X) ஆனது சுவையின் விவரணம் ஆதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) ஆக்கக்கூறு ஒன்றாக ஏதேனும் சுவையை அதிகரிக்கும் பொருளை அல்லது எவையேனும் சுவையை அதிகரிக்கும் பொருட்களைக் கொண்டிருக்குமிடத்து, விடயத்திற்கேற்ப, அவற்றின் பொதுவான பெயர் அல்லது பெயர்களுடன் INS இலக்கத்தையும் இலக்கங்களையும் சேர்த்து, விடயத்திற்கேற்ப, "சுவையை அதிகரிக்கும் பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது" அல்லது "சுவையை அதிகரிக்கும் பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன" என்னும் சொற்களை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) உணவுப் பொதியில் அச்சிடப்பட்ட அல்லது அதற்கு இணைக்கப்பட்ட சுட்டுத்துண்டானது ஏதேனும் உணவுடன் சேர்த்துக்கொண்ட "இயற்கையானதை ஒத்த எவையேனும் சுவைகளை" "இயற்கைச் சுவைகள்" என விபரிக்காது.

(4) உணவுப் பொதியில் அச்சிடப்பட்ட அல்லது அதற்கு இணைக்கப்பட்ட சுட்டுத் துண்டில், உணவானது வேறு ஏதேனும் சுவையை அதிகரிக்கும் பொருளை அல்லது எவையேனும் சுவையை அதிகரிக்கும் பொருட்களைக் கொண்டுள்ளபோது, சுவையை அதிகரிக்கும் பொருள் ஒன்றும் இல்லை என்றவாறான வெளிப்படுத்துகை எதுவும் செய்யப்படுதல் ஆகாது.

9. (1) சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றை அல்லது சுவையை அதிகரிக்கும் பொருள் ஒன்றைக் கொண்டுள்ள உணவுப் பொருளின் சுட்டுத்துண்டிடலானது, அதன் பின்னர் திருத்தப்படக்கூடியவாறான அல்லது மாற்றீடு செய்யப்படக்கூடியவாறான, 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதிய 1376/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உணவு (சுட்டுத்துண்டிடல் மற்றும் விளம்பரஞ் செய்தல்) ஒழுங்குவிதிகள் 2005 ஆம் ஆண்டின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) (அ) இயற்கை சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றின் கொள்கலன் ஒன்றில் அச்சிடப்பட்ட அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட சுட்டுத்துண்டு "இயற்கை (சுவையின் விவரணத்தை இங்கே உட்புகுத்தவும்) சுவையூட்டி" என்னும் சொற்களை உள்ளடக்குதல் வேண்டும் ;

(ஆ) இயற்கையானதை ஒத்த சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றின் கொள்கலன் ஒன்றில் அச்சிடப்பட்ட அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட சுட்டுத்துண்டு "இயற்கையானதை ஒத்த (சுவையின் விவரணத்தை இங்கு உட்புகுத்தவும்) சுவையூட்டி" என்னும் சொற்களை உள்ளடக்குதல் வேண்டும் ;

(இ) செயற்கை சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றின் கொள்கலன் ஒன்றில் அச்சிடப்பட்ட அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட சுட்டுத்துண்டு "செயற்கை (சுவையின் விவரணத்தை இங்கே உட்புகுத்தவும்) சுவையூட்டி" என்னும் சொற்களை உள்ளடக்குதல் வேண்டும் ;

(ஈ) சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றின் கொள்கலன் ஒன்றில் அச்சிடப்பட்ட அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட சுட்டுத்துண்டு "இயற்கையானதை ஒத்த எவையேனும் சுவைகளை", "இயற்கை சுவைகள்" என விபரித்தலாகாது.

(உ) இப்பந்தியின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சுவையூட்டும் பதார்த்தத்தின் கொள்கலன் ஒன்றில் அச்சிடப்பட்ட அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட சுட்டுத்துண்டு, விடயத்திற்கேற்ப, அத்தகைய சுவையூட்டும் பதார்த்தத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு வேறு பதார்த்தத்தின் பொதுவான பெயர் மற்றும் INS இலக்கம், ஏதேனும் இருப்பின் அவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஊ) சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றின் கொள்கலன் ஒன்றில் அச்சிடப்பட்ட அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட சுட்டுத்துண்டு, விடயத்திற்கேற்ப, ''உணவுக்கானது'' என்னும் கூற்றொன்றை அல்லது ''உணவில் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடுள்ளது'' என்னும் கூற்றை அல்லது அதனது கருதப்பட்ட உணவுப் பயன்பாடு பற்றிய மிகவும் குறிப்பான குறிப்பீடு ஒன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளில் -

"செய்கை சுவையூட்டும் பதார்த்தம்" என்பது இயற்கை வாசனையுள்ள மூலப்பொருள் அல்லது இயற்கைச் சுவை செறிவு ஒன்றில் இனங்காணப்படாத சுவையூட்டும் பதார்த்தம் என்றும் மற்றும் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தடைசெய்யப்படாததும் மற்றும் பின்வருவனவற்றுள் ஒன்றினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு உணவில் பயன்படுத்தப்படுவதற்குப் பாதுகாப்பானதென ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான சுவையூட்டும் பதார்த்தம் ஒன்று எனவும் பொருள்படும் என்பதுடன், அது இயற்கை சுவையூட்டும் பதார்த்தங்களையும் அல்லது இயற்கையானதை ஒத்த சுவையூட்டும் பதார்த்தங்களையும் கொண்டிருக்கலாம் :-

(அ) கூட்டுப் பதிவேட்டுக் கோவையின் (Code of Federal Register) நிரற்படுத்தப்பட்டு ஐக்கிய அமெரிக்க உணவு மற்றும் ஔடத நிர்வாகத்தினால் (FDA) சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றாக அனுமதிக்கப்பட்டது ;

(ஆ) சுவை மற்றும் பிரித்தெடுப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (FEMA) சுயேச்சையான நிபுணர்களினால் தீர்மானிக்கப்பட்டவாறு "பாதுகாப்பானது எனப் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டது" (GRAS) ;

(இ) உணவில் சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றாகப் பயன்படுத்தப்படும்போது பாதுகாப்புப் பிரச்சினை எதுவும் இருக்கவில்லையென JEFCA இனால் (இணைந்த FAO, WHO உணவுச் சேர்வைகள் மீதான நிபுணத்துவக் குழு) மதிப்பிடப்பட்டு கோடெக்சினால் (Codex) ஏற்றுக்கொள்ளப்பட்ட சுவையூட்டிகளின் ஆகப் பிந்திய பட்டியல் ;

"சுவையூட்டும் தூள் அல்லது கறித்தூள்" என்பது, உலர்ந்த, சுத்தமான மற்றும் செம்மையான, கறுப்பு மிளகு, கறுவா, கராம்பு, கொத்தமல்லி, சீரகம், பெருஞ்சீரகம், வெள்ளைப்பூடு, இஞ்சி, கடுகு, மஞ்சள், சாதிக்காய், கறிவேப்பிலை முதலியன போன்ற அத்தகைய வாசனைப் பொருட்களில் இரண்டையோ அல்லது மேற்பட்டவைகளையோ அரைப்பதன் மூலம் பெறப்பட்ட தூள் எனப் பொருள்படும் ;

"சமையல் மூலிகைகள்" என்பது, உணவில் சுவையூட்டி ஒன்றாகப் பயன்படுத்தப்படும் மூலிகைத் தாவரங்களின் பச்சை இலைகள் அல்லது உலர்ந்த இலைகள் என்று பொருள்படும்.

"சிசுக்களுக்கான அல்லது மூன்று வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கான உணவு" என்பது, சிசுக்களுக்கென அல்லது மூன்று வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட அல்லது சந்தைப்படுத்தப்பட்ட உணவு எனப் பொருள்படும் ;

"சுவையை அதிகரிக்கும் பொருட்கள்" என்பது, உணவிற்கு சேர்க்கப்படும்போது அவ்வுணவின் சுவையை மேம்படுத்தும் அல்லது அதிகரிக்கும் இயலுமையுள்ள ஏதேனும் பதார்த்தம் எனப் பொருள்படும் ;

"இயற்கை வாசனையுள்ள மூலப்பொருள்" என்பது, ஒன்றில் அதனது இயற்கை வடிவத்தில் அல்லது வெப்பப்படுத்தல் அல்லாத, வேறு பௌதீக முறையினால் பதப்படுத்தப்பட்ட பின்னர் சுவையூட்டும் பண்புகளைக் கொண்டிருக்கின்ற தாவர மூலங்களின் அல்லது விலங்கு மூலங்களின் பதார்த்தம் ஒன்று எனப் பொருள்படும் ;

"இயற்கை சுவையூட்டும் செறிவு" என்பது, அதனது பச்சை நிலையில் அல்லது உலர்த்துதல் வாட்டுதல் மற்றும் நொதிக்கப்பண்ணுதல் உள்ளடங்கலாக பாரம்பரிய உணவு தயாரிப்பு முறையினால் பதப்படுத்திய பின்னர் தாவர மூலத்தின் அல்லது விலங்கு மூலத்தின் மூலப்பொருட்களிலிருந்து பௌதீக, நுண்ணுயிரியல் அல்லது நொதியப்படுத்துதல் முறையில் பெறப்பட்ட செறிவாக்கப்பட்ட தயாரிப்பு ஒன்று எனப் பொருள்படும் ;

"இயற்கை சுவையூட்டும் பதார்த்தம் " என்பது, ஒன்றில் அதனது பச்சை நிலையில் அல்லது உலர்த்துதல், வாட்டுதல் மற்றும் நொதிக்கப்பண்ணுதல் உள்ளடங்கலாக பாரம்பரிய உணவு தயாரிப்பு முறையினால் பதப்படுத்திய பின்னர் தாவர மூலத்தின் அல்லது விலங்கு மூலத்தின் மூலப்பொருட்களிலிருந்து பௌதீக நுண்ணுயிரியல் அல்லது நொதியப்படுத்துதல் முறையில் பெறப்பட்ட செறிவாக்கப்பட்ட தனி இரசாயன அலகு என்பதுடன், இவ்வொழுங்குவிதிகளின் கீழ்த் தடைசெய்யப்படாததும் மற்றும் பின்வருவனவற்றுள் ஒன்றினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றினால் சுட்டிக் காட்டப்பட்டவாறு உணவில் பயன்படுத்தப்படுவதற்குப் பாதுகாப்பானதென ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான சுவையூட்டும் பதார்த்தம் ஒன்று எனவும் பொருள்படும் என்பதுடன், அது இயற்கை வாசனையுள்ள மூலப்பொருட்களையும் மற்றும் இயற்கைச் சுவையூட்டும் செறிவுகளையும் கொண்டிருக்கலாம் . ஆனால் ஏதேனும் இயற்கையானதை ஒத்த சுவையூட்டும் பதார்த்தத்தையோ அல்லது செயற்கை சுவையூட்டும் பதார்த்தத்தையோ கொண்டிருத்தல் ஆகாது :-

(அ) கூட்டுப் பதிவேட்டுக் கோவையின் (Code of Federal Register) நிரற்படுத்தப்பட்டு ஐக்கிய அமெரிக்க உணவு மற்றும் ஔடத நிர்வாகத்தினால் (FDA) சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றாக அனுமதிக்கப்பட்டது ;

(ஆ) சுவை மற்றும் பிரித்தெடுப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (FEMA) சுயேச்சையான நிபுணர்களினால் தீர்மானிக்கப்பட்டவாறு "பாதுகாப்பானது எனப் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டது" (GRAS) ;

(இ) உணவில் சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றாகப் பயன்படுத்தப்படும்போது பாதுகாப்புப் பிரச்சினை எதுவும் இருக்கவில்லையென JEFCA இனால் (இணைந்த FAO, WHO உணவுச் சேர்வைகள் மீதான நிபுணத்துவக் குழு) மதிப்பிடப்பட்டு கோடெக்சினால் (Codex) ஏற்றுக்கொள்ளப்பட்ட சுவையூட்டிகளின் ஆகப் பிந்திய பட்டியல் ;

"இயற்கையானதை ஒத்த சுவையூட்டும் பதார்த்தம்" என்பது, வாசனையுள்ள மூலப்பொருட்களிலிருந்து இரசாயன ரீதியாகத் தனியாக்கப்பட்ட அல்லது செய்கை ரீதியாகப் பெறப்பட்டதும், அத்துடன் பதப்படுத்தப்பட்ட அல்லது செய்முறைப்படுத்தப்படாத மனித நுகர்விற்கான இயற்கை உற்பத்திப் பொருட்களில் அடங்கியுள்ள பதார்த்தங்களுக்கு இரசாயன ரீதியில் ஒத்த தன்மையுள்ளதுமான ஏதேனும் பதார்த்தம் என்பதுடன், இவ்வொழுங்குவிதிகளின் கீழ்த் தடைசெய்யப்பட்டாததும் மற்றும் பின்வருவனவற்றுள் ஒன்றினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு உணவில் பயன்படுத்தப்படுவதற்குப் பாதுகாப்பானதென ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான சுவையூட்டும் பதார்த்தம் ஒன்று எனவும் பொருளாகும் என்பதுடன், அது இயற்கை சுவையூட்டும் பதார்த்தங்களை இயற்கை சுவையூட்டும் செறிவை அத்துடன் இயற்கை வாசனை மூலப் பொருட்களைக் கொண்டிருக்கலாம். ஆனால் ஏதேனும் செய்கை சுவையூட்டும் பதார்த்தத்தைக் கொண்டிருத்தலாகாது :-

(அ) கூட்டுப் பதிவேட்டுக் கோவையின் (Code of Federal Register) நிரற்படுத்தப்பட்டு ஐக்கிய அமெரிக்க உணவு மற்றும் ஔடத நிர்வாகத்தினால் FDA) சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றாக அனுமதிக்கப்பட்டது ;

(ஆ) சுவை மற்றும் பிரித்தெடுப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (FEMA) சுயேச்சையான நிபுணர்களினால் தீர்மானிக்கப்பட்டவாறு பாதுகாப்பானது எனப் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டது (GRAS) ;

(இ) உணவில் சுவையூட்டும் பதார்த்தம் ஒன்றாகப் பயன்படுத்தப்படும்போது பாதுகாப்புப் பிரச்சினை எதுவும் இருக்கவில்லையென JEFCA இனால் (இணைந்த FAO, WHO உணவுச் சேர்வைகள் மீதான நிபுணத்துவக் குழு) மதிப்பிடப்பட்டு கோடெக்சினால் (Codex) ஏற்றுக்கொள்ளப்பட்ட சுவையூட்டிகளின் ஆகப் பிந்திய பட்டியல் ;

## *அட்டவணை I*

*ஒழுங்குவிதி 3 .*

*உணவில் பயன்படுத்தப்படுவதற்கு தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள்*

1. *அலொயின்* - (Aloin)
2. பேபரின் - (Berberine)
3. *பீட்டா - அசரோன் மற்றும் சினமைல் அந்திரசிலேற் -* ( Beta-Azarone and cinnamyl anthracillate)
4. கேட் ஒயில் - (Cade oil)
5. *கலமஸ் ஒயில் -* (Calamus oil)
6. கொகேயின் - (Cocaine)
7. கோமரின் - (Coumarin)
8. *டை எதைலின் கிளைகோல் -* ( Diethylene glycol)
9. *டை எதைலின் கிளைகோல் மொனோஎதைல் ஈதர் -* (Diethylene glycol monoethyl ether)
10. எஸ்ராகோல் - (Estragole)
11. *யூயினைல் மெதைல் ஈதர் -* ( Eugenyl methyl ether)
12. ஹைபேரிசின் - (Hypericine)
13. நைற்ரோபென்சின் - (Nitrobenzene)
14. *பைரோலிஜினஸ் அசிட் -* (Pyroligenous acid)
15. *சப்ரோல் மற்றும் ஐசோசப்ரோல் -* (Saffrole and Isosaffrole)
16. சன்ரோனின் - (Santonin)
17. *சசபிறஸ் ஒயில் -* (Sasafras oil)
18. துயோன், ஐசோதுயோன், (*அல்பா மற்றும் பீற்றா துயோன்*) - (Thujone, Isothujone, (∝ & ß thujone)
19. றொன்கா பீன் (*டிப்ரைல் அடோறஸ்*) - (Tonka bean (*Dipteryl adorat*)
20. உடலிற்கு ஊறு விளைவிக்கின்ற அல்லது ஊற விளைவிக்கக்கூடியதான வேறு ஏதேனும் சுவையூட்டும் பதார்த்தங்கள்.

## *அட்டவணை II*

*ஒழுங்குவிதி 4 மற்றும் 5 .*

**அனுமதிக்கப்பட்ட கரைசல்கள்**

*பின்வரும் கரைசல்கள் சுவையூட்டும் பதார்த்தங்களில் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன :-*

1. *டயசிற்றின் (கிளிசறின், டயசிற்ரேற், கிளிசறில் டயசிற்ரேற், கிளிசறோல் டயசிற்ரேற்)* - Diacetin (glycerine diacetate, glyceryl diacetate, glycerol diacetate)
2. *டைஈதைல் ஈதல் -* (Diethyl ether )
3. *ஈதைல் அசெற்றேற் -* (Ethyl acetate)
4. *ஈதைல் அல்ககோல் -* (Ethyl alcohol)
5. கிளிசறோல் - (Glycerol)
6. *ஐசோபுரோபைல் அல்ககோல் -* (Isopropyl alcohol)
7. *புரோபைலின் கிளைகோல் -* (Propylene glycol)
8. *றையசிற்றின் (கிஸிசறின் றையசிற்ரேற், கிளிசறில் றையசிற்ரேற், கிளிசறோல் றையசிற்ரேற்)* Triacetin (glycerine triac etate, glyceryl triacetate, glycerol triacetate)
9. *நீர் -* (Water)

## *அட்டவணை III*

*ஒழுங்குவிதி* 7 (iii).

*சுவையை அதிகரிக்கும் பொருட்கள் சேர்ப்பது தடைசெய்யப்பட்ட உணவுகள் :-*

1. *பாலும் பால் உற்பத்திகளும்*
2. *ஐஸ்கிறீமும் குளிரூட்டப்பட்ட பழவகை உணவுகளும்*
3. *கொழுப்புகளும் எண்ணெய்களும்*
4. *மாஜரினும் கொழுப்பு பரப்புதல்களும்*
5. *புதிய மேற்பரப்பு பதனிடப்பட்ட, தோல் உரிக்கப்பட்ட அல்லது வெட்டப்பட்ட பழங்களும் மரக்கறிகளும்.*
6. *காளான்களும் அவற்றின் உற்பத்திகளும்*
7. *பழ வகைகள்*
8. *பழத்தூள், காய்த்தூள், உடனடிப் பாவனைக்கான பழம்/காய்கறி சட்னிக்கலவை (உலர்த்தியது) தவிர்ந்த பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்திப் பொருட்கள் யாவும்*
9. *வினாகிரி*
10. *உணவுத் தானியங்கள், பருப்புவகை, எண்ணெய் விதைகள் மற்றும் அரைக்கப்பட்ட/மாவா ஆக்கப்பட்ட உணவுத் தானியங்கள்.*
11. *அரிசி உட்பட முழுமையான, உடைக்கப்பட்ட அல்லது நசுக்கப்பட்ட தானியங்கள்*
12. *உண்ணக்கூடிய மா, மற்றும் மாப்பொருள்கள்*
13. *சவ்வரிசி*
14. *பஸ்ரா* ( Pasta) *மற்றும் நூடில்ஸ் (உலர்த்தப்பட்ட உணவுப் பொருட்கள் மட்டும்)*
15. *மோல்ற்றை அடிப்படையாகக் கொண்ட உணவுகள் மற்றும் பாலை அடிப்படையாகக்கொண்ட உணவுகளும்.*
16. *பேக்கரி உற்பத்திகள்*
17. *புதிய இறைச்சி, கோழி மற்றும் வேட்டை விலங்கு முழுத்துண்டுகள் அல்லது வெட்டப்பட்ட அல்லது நறுக்கப்பட்ட துண்டுகள்*
18. *புதிய மீன், மொலஸ்க், நண்டு இனம், முட்கள் செறிந்த தோலையுடைய உயிரினம்* (Echinoderms)
19. *வெள்ளைச்சீனி, பழுப்புச் சீனி மற்றும் சுக்குரோக, சக்கரோசு, புருட்ரோசு, குளுக்கோசு (டெக்ரோசு) சைலோசு, சீனிக் கரைசல் மற்றும் பாணி, அத்தோடு (பகுதியளவில்) மாற்றப்பட்ட வெல்லம், வெல்லப் (பனை வெல்லம்) பாகு, சீனிமேற்றப்புடைய பண்டம், வேறு வெல்லங்கள் மற்றும் பாணிகள், தேன்*
20. *சீனி இனிப்புப் பண்டம்*
21. *ஐஸ் இனிப்புப் பண்டங்கள்*
22. *சிறு பொதியிட்ட விசேட கறிக் கலவையும் சுவையூட்டிக் கலவைகளும் தவிர்ந்த சமையல் மூலிகைகள், வாசனைப் பொருட்கள், சுவையூட்டும் தூள் அல்லது கறித்தூள்*
23. *கருந் தேயிலை, பசுந் தேயிலை, கோப்பி, மூலிகைச் சாறு மற்றும் தானியக் குடிவகைகள்*
24. *பேக்கிங் பவுடர்*
25. *கொக்கோ பட்டர் மற்றும் கொக்கோ உற்பத்திகள்*

*2- 585*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*